IN THE COURT OF THE SUBORDINATE JUDGE, METTUR

MCOP 39/2024

Deposition of PW 1 witness of Plaintiff/Petitioner/Defendant/Respondent solemnly affirmed by Bench Clerk in OP Section of this court in accordance with the provisions of Oaths Act 1969 (Act 44 of 1969) on 06.03.2026

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | ஜெயக்குமார் | **Caste** | : | |
| **S/o.** | : | தர்மலிங்கம் | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**2–ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் பொறியியல் படித்துள்ளேன். நான் தமிழ்நாடு மின்சார வாரியத்தில் உதவி செயற்பொறியாளராக பணியாற்றுகிறேன். எனக்கு தமிழ் மற்றும் ஆங்கிலம் படிக்கவும் எழுதவும் தெரியும். நான் மாதம் பிடித்தம் போக ரூ.1,65,000/–சம்பளம் வாங்குகிறேன். நான் விபத்தை நேரில் பார்க்கவில்லை. எனக்கு தகவல் கிடைத்து தான் சம்பவ இடத்துக்கு சென்றேன். செல்வம் என்பவர் எனக்கு தகவல் சொன்னார். நான் இருக்கும் இடத்திற்கும் சம்பவம் நடந்த இடத்திற்கும் சுமார் 18 கிலோமீட்டர் இருக்கும். எனக்கு தகவல் கொடுத்த செல்வம் என்பவரை போலிஸார் விசாரித்தார்களா என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது. செல்வம் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

2. சம்பவ சமயத்தில் விபத்தில் இறந்த நபர் சீட்பெல்ட் அணியவில்லை என்றால் சரியல்ல. அவர் அணிந்திருந்ததாக சொன்னார்கள். முதல் தகவல் அறிக்கையில் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் சென்றதாக சொல்லயுள்ளேனா என்றால் சரியல்ல. தேசிய நெடுஞ்சாலையில் வேகமாக சென்றதாக சொல்லியுள்ளேன். விபத்தில் இறந்த தமிழரசி எனது மனைவி என்றால் சரிதான். காரை இயக்கிய ஓட்டுநர் என் மகன் என்றால் சரிதான். இறந்துபோன தமிழரசியின் தாயார் வசந்தா என்பவரை தரப்பினராக மனுவில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். வசந்தா என்பவரை தரப்பினராக சேர்ககாததால் வழக்கு உரிய தரப்பினரை சேர்க்காத காரணத்திற்காக தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

3. என்னிடம் காட்டப்படும் ம.த.சா.ஆ.11 வது ஆவணத்தில் எனது மனைவியின் சம்பளப்பட்டியல் என்றால் சரிதான். அதில் எனது மனைவிக்கு பிடித்தம் போக ரூ.56,541/– என்றால் சரிதான். மொத்தம் சம்பளம் ரூ.1,21,160/–. வருமான வரி எனது மனைவி செலுத்தி வருகிறார் என்றால் சரிதான். எனது மனைவியின் வருமான வரி அட்டை மற்றும் படிவம் 16C தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்து நடந்த போது காரின் ஓட்டுனரான எனது மகன் சாலையின் வலதுபுறம் உள்ள புளியமரத்தின்

மீது மோதி விபத்து ஏற்படுத்திவிட்டார் என்றால் சரிதான். விபத்து நடைபெற்ற தேதி 29.04.2024 நேரம் 1.45 மணி என்றால் சரிதான். வாகனம் என்னுடைய சொந்த வாகனம் இல்லை என்றால் சரிதான். மேற்படி வாகனத்தின் பதிவெண் TN 29 AL 0374 என்றால் சரிதான்.

4. மேற்படி வாகனம் 1ம் எதிர்மனுதாரர் சிவபிரகாஷத்திற்கு சொந்தமானது என்றாலும் அவர் எனது மனைவியின் தாய்மாமா என்றாலும் சரிதான். அவர் வாகனத்திற்கு ஏற்பட்ட சேதாரத்திற்கு இழப்பீடு பெற்றுள்ளாரா என்றால் அது எனக்கு தெரியாது. மேற்படி விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் ஓட்டுநர் தூக்க கலக்கத்தில் அதிவேகமாக ஓட்டி வந்து புளியமரத்தில் மோதி விபத்தை ஏற்படுத்தி விட்டார் என்றால் சரியல்ல. மேற்படி விபத்து ஏற்படுத்திய வாகனமான TN 29 AL 0374 Act policy மட்டும் உள்ளது என்றாலும் Comprehensive Policy இல்லை என்றாலும் சரியல்ல.

5. எனது மகனான ஓட்டுநரின் கவனக்குறைவால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிருரை குறித்து விவரம் எனக்கு தெரியுமா என்றால் அது நான் படித்து பார்க்கவில்லை அது குறித்து தெரியாது. எனது மாமியார் வசந்தாவை உரிய தரப்பினராக சேர்க்காத காரணத்திற்காகவும், எனது மனைவி சென்ற காரின் ஓட்டுநரின் தவறின் காரணமாக விபத்து ஏற்பட்டதாலும், எனது மனைவியின் சம்பளம் குறித்து நேரிடையாக தெரியாததாலும் எனது மனு 2ம் எதிர்மனுதாரர் குறித்து தள்ளுபடி ஆக வேண்டும் என்றால் சரியல்ல. இறந்த எனது மகனுக்காக நஷ்டஈடு குறித்து இன்றைய தேதி வரை மனுதாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மனு 2ம் எதிர்மனுதாரர் குறித்து தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்த எதிருரை குறித்து மறுப்பு ஏதும் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

ஒம்/—ஜெயக்குமார்

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/—ஆர்.சரவணபாபு,
சார்பு நீதிபதி,
மேட்டூர்.